உ

ஸ்ரீ நித்ய கல்யாணி அம்மன் துணை

# Sri Nithyakalyani Amman Seva Samithi Religious Trust
# (SNASS Religious Trust)
# Thappalampuliyur

Date:19-07-2016.

**அன்புள்ள செவார்த்திகளுக்கு**

**பொருள் : 2016 ஆண்டுக்கான கல அரும்பு உத்சவம்**

கடந்த ஆண்டுகளைப்போல , இந்த ஆண்டும், நமது **SNASS Religious Trust** , ஸ்ரீ நித்யகல்யாணி அம்மனின் மிக பழமையானதும் தனித்தன்மை வாய்ந்ததுமான **"கல அரும்பு உத்ஸவத்தை"** மிக சிறப்பாக நடத்த உள்ளது . இந்த உத்ஸவத்தில், பழங்காலத்து வழிமுறையை பின்பற்றி ஒரு கலம் (24 படிகள்) மல்லிகை மற்றும் முல்லை அரும்புகள் மூலம் கோவில் சன்னதிகள் மற்றும் அம்பாளை அலங்கரித்து வழிபடுவது வழக்கம்

இதன் மூலம், வருடந்தோறும்,**SNASS** தனது முக்கிய குறிக்கோளில் ஒன்றான கிராம மற்றும் வெளியூர் சேவார்த்திகளை ஒன்று திரட்டி கோவில் விழாக்களில் கலந்துகொள்வதை ஊக்குவித்து வருகிறது ( கடந்த வருடம் இந்த விழாவில் சுமார் 250/300 பேர்கள் கலந்துகொண்டனர் )

எல்லா வருடம் போலவே, இந்த வருடமும் இந்த உத்ஸவத்தை கிராம மற்றும் வெளியூர் சேவார்த்திகள் கலந்துகொண்டு சிறப்புற நடத்தும் வகையில் கீழ்கண்ட ஏற்பாடுகளை SNASS நடத்த உத்தேசித்துள்ளது

- கல அரும்பு உத்ஸவ நிகழ்ச்சி பற்றி சுவரொட்டி மற்றும் பொது அறிவிப்பின் மூலம் நமது மற்றும் சுற்றுப்புற கிராமங்களுக்கு தெரியப்படுத்துதல்
- மொத்தமாக ஒரு கலம் முல்லை மற்றும் மல்லிகை அரும்பு வாங்குவதற்கு ஆவன செய்தல்
- கிராம ஆன்மீக பெண்மணிகளை ஈடுபடுத்தி அரும்புகளை தொடுத்து அம்பாளின் அருளை பெறசெய்தல்
- நிகழ்ச்சி அன்றைய தினம் காலையில் சுவாமி மற்றும் அம்பாளுக்கு சஹஸ்ரநாம அர்ச்சனை செய்தல்
- மாலையில் சன்னதிகளில் புஷ்ப அலங்காரம் செய்தல்
- உதிரிபூக்களால் அம்பாளுக்கு அலங்காரம் செய்தல்
- பிறகு அலங்கார தீபாராதனை நடத்துதல் .
- கடைசியில் சேவார்த்திகளுக்கு பிரசாதம் வழங்குதல்

இவைகள் மூலமாக SNASS , தப்பளாம்புலியூரில், ஆன்மீக புத்துணர்ச்சியை அதிகப்படுத்தி உள்ளூர் மற்றும் வெளியூர் சேவார்த்திகளை கோவிலுக்கு வந்து நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு அம்பாளின் அருளை பெறசெய்வதில் மகிழ்ச்சியடைகிறது

இம்மாதிரியான, முக்கிய நிகழ்ச்சியில் SNASS உங்களுடைய பொருளுதவி மற்றுமின்றி, தாங்கள் தங்களுடைய குடும்பத்தினருடன் வருகை தந்து ,உங்களுடைய ஆதரவை நல்குமாறு வேண்டிக்கொள்கிறது

இத்தகைய உங்கள் ஆதரவு SNASS ன் செயல்பாடுகளில் மேன்மேலும் முன்னேற்றம் காண ஒரு தூண்டுகோலாக இருக்கும் என்று தெரிவித்துகொள்கிறோம்

முக்கிய குறிப்பு

எல்லா வருடங்களும் கல அரும்பு உத்ஸவம் பழங்கால முறைப்படி ஆடி மாத கடைசி வெள்ளிக்கிழமைகளில் கொண்டாடப்படும்.

ஆனால் இந்தவருடம் அந்த சமயத்தில் நமது கிராமம் ஸ்ரீ குளுந்தாளம்மன் கோயில் அம்மனுக்கு காப்புக்கட்ட கிராமத்தில் உததேசித்து இருக்கிறது. (15 நாட்கள் உத்ஸவம்). ஒரு கிராமத்தில் ஒரு அம்மனுக்கு காப்புக்காட்டினால் இன்னொரு அம்மனுக்கு எந்த உத்ஸவமும் நடத்தக்கூடாது என்பது வழக்கம் . அதனால் இந்த வருடம் ,கல அரும்பு உத்ஸவத்தை முன்கூட்டியே **ஆடி மாதம் இரண்டாவது வெள்ளிக்கிழமை (29-07-16)** நடத்த , கிராமமக்கள் மற்றும் M.S. சாஸ்திரிகள் அவர்களை கலந்து ஆலோசித்து முடிவு செய்யப்பட்டுள்ளது.

**மேற்படி உத்ஸவத்திற்கு பொருளுதவி செய்ய விரும்புவர்கள் கீழே குறிப்பிட்டுள்ளபடி பொருளுதவி அளிக்கலாம்**

***By Cheque/ DD Payable to***

**"SNASS Religious Trust"**

Address:
Mr. T.P. Vaidyanathan
Apt No 2, Raj Residency,
6/9, Seethammal Colony First Main Road,
Alwarpet, Chennai- 600 018
Phone – 044-24311096

***Via Bank Transfer***

**"SNASS Religious Trust"**

A/C Number (15Digits) 112-001-00-1397843
City Union Bank,
Branch: Purasawakkam, Chennai, 600084
NEFT - CIUB0000112
With an intimation to tpvraman@yahoo.com, vaidehi.krishnamurthy@gmail.com snasstpuliyur@gmail.com